2017 ஜூலை 6]

அவர்களின் மக்கள் நலன் சார்ந்திருக்கிற அந்தக் கோரிக்கை பரிசீலனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. சத்யா அவர்கள்.*

திருமதி ப. சத்யா: *மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 11–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 149, மாண்புமிகு உறுப்பினர் திரு. அம்மன் கே. அர்ச்சுணன், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

149—

படகு குழாம்

***8571—திரு. அம்மன் கே. அர்ச்சுணன்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் தெற்கு தொகுதி, உக்கடம் பெரியகுளத்தில் படகு குழாம் அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. வெல்லமண்டி ந. நடராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயம்புத்தூர் தெற்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு திரு. அம்மன் கே. அர்ச்சுணன் அவர்கள், கோயம்புத்தூர் தென் பகுதியிலுள்ள உக்கடம் பேருந்து நிலையத்திற்கு அருகில் அமைந்துள்ள பெரியகுளத்தில் படகு குழாம் அமைக்க அரசு முன்வருமா என்ற கேள்வியினை வினவியிருக்கின்றார்கள்.*

கோயம்புத்தூர் தென் பகுதியிலுள்ள உக்கடம் பேருந்து நிலையத்திற்கு அருகிலுள்ள பெரியகுளம், கோயம்புத்தூர் மாநகராட்சியின் கட்டுப்பாட்டில் உள்ளது. கோயம்புத்தூர் மாநகராட்சியில் ஸ்மார்ட் சிட்டி திட்டம் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளதன் அடிப்படையில், பெரியகுளம் கரையில்

மோட்டார் அல்லாத வாகனங்களுக்கான பாதை அமைக்கப்பட உள்ளதால், மாநகராட்சி சார்பில் அவ்விடத்தில் படகு குழாம் அமைக்க இயலாது என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அம்மன் கே. அர்ச்சுணன் அவர்கள்.*

திரு. அம்மன் கே. அர்ச்சுணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் நன்றாக இருக்க இறைவனை வணங்குகின்றேன். நின்றால் இமயம், நடந்தால் கங்கை, பேசினால் வேத பாராயணம், சிரித்தால் வசந்தம், சீறினால் பிரளயம், இடிகளுக்கே அஞ்சாத இந்திர தனுசாய் இந்த மண்ணிலே வாழ்ந்து, என்ன கொடுப்பார், ஏது கொடுப்பார் என்று எண்ணும் முன்பே, பொன்னும் கொடுப்பார், (மேசையைத் தட்டும் ஒலி) பொருளும் கொடுப்பார், போதாது, போதாது என்றால் தன்னையே தான் கொடுத்த எங்கள் பொன்மாதா, இதய தெய்வம் அம்மா அவர்கள் உறங்கும் திசை நோக்கி பாதம் பணிந்து வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அவர் வழியில் நல்லாட்சி செய்து கொண்டிருக்கின்ற எங்கள் கொங்கு நாட்டுச் சிங்கம் மாண்புமிகு முதல்வர் அவர்களையும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களையும் வணங்கி, (மேசையைத் தட்டும் ஒலி) கோயம்புத்தூர் மாவட்டம், உக்கடம் பெரியகுளத்தில் பொழுதுபோக்குவதற்கு வேறு எந்த வசதியும் இல்லாததால், படகு குழாம் அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு, அமைகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. வெல்லமண்டி ந. நடராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மீண்டும் வைத்திருக்கின்ற கோரிக்கையின் அடிப்படையில், கோயம்புத்தூர் மாவட்டத்திற்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக படகு குழாம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகளை, கோயம்புத்தூர் மாநகராட்சி அலுவலருடன் கலந்து பேசி, வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை மற்றும் அவ்விடத்தின் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு,*

2017 ஜூலை 6]

கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் பரிந்துரை, கருத்துரு மற்றும் திட்ட மதிப்பீடுகள் ஆகியவை பெறப்பட்டு, நிதிநிலைமைக்கேற்ப தக்கதொரு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை இம்மாமன்றத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அம்மன் கே. அர்ச்சுணன் அவர்கள்.*

திரு. அம்மன் கே. அர்ச்சுணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தென்னிந்தியாவின் மான்செஸ்டர்' என்றழைக்கப்படும் கோயம்புத்தூர் அனைத்து தொழில் வளங்களும் நிறைந்த ஒரு நகரமாகும். அங்கு அதிகப்படியான வெளிநாட்டவர்களும், வெளி மாநிலத்தவர்களும் தொழில்புரிந்து வருகின்றார்கள். அவர்களின் வசதிக்காகத்தான், படகு குழாம் அமைக்க அரசு முன்வருமா என்ற கேள்வியைத் தொடுத்தேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடமும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களிடமும் கலந்தாலோசித்து, நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று கூறியதற்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன். நன்றி.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 150, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சந்திரசேகரன், மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

150—

விளையாட்டு மைதானம்

***1214—திரு. சி. சந்திரசேகரன்:**

மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேந்தமங்கலம் தொகுதி, கொல்லிமலை ஒன்றியம், வாழவந்திநாடு வல்வில் ஓரி உண்டி, உறைவிட மேல்நிலைப் பள்ளிக்கு விளையாட்டு மைதானம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?